உ

ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன் துணை

# மாவிளக்கு பிரார்த்தனை தீபம்



தப்பளாம்புலியூர் கிராமத்தின் பாரம்பரிய விசேஷ அனுஷ்டான முறைகளை தற்போதிருக்கும் சந்ததி மட்டுமல்லாமல் வருங்கால சந்ததிகளுக்கும் எடுத்து செல்லும் ஒரு முயற்சி...


**SNASS RELIGIOUS TRUST**

Thappalampuliyur,

Ph: 044-24311096 / 98400 36514 / 95510 66125

E-mail : snasstpuliyur@gmail.com


மே 2020

# முன்னுரை

தப்பளாம்புலியூர் கிராமவாசியின் மருமகளாக (Daughter In Law) இருப்பதில் நான் பெருமைப்படுகின்றேன். அந்த முறையில் அந்த கிராம பழங்கால ஆன்மீக பழக்க வழக்கங்களை அறிந்துகொண்டு அதனை எங்கிருந்தாலும் கடைப்பிடிப்பதோடு மட்டுமல்லாமல் அதனை அடுத்த வாரிசுக்கு தொடர்ந்து கடைப்பிடிக்க உதவியாக இருக்கவேண்டிய கடமை எனக்குள்ளது.அந்த வகையில் நான் எனது இருப்பிடத்தில், தப்பளாம்புலியூர் வழக்கப்படி நித்யகல்யாணி அம்மனுக்கு மாவிளக்கு பிரார்த்தனை செய்துவருகிறேன்.

பெயரின் விளக்கப்படி ,மாவிளக்கு என்பது அரிசிமாவு மற்றும் நெய்யிலான ஒரு விளக்கு.மாவிளக்கு போடுதல் என்ற பழக்கம் நமது தப்பளாம்புலியூர் கிராமத்துக்கு மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் எல்லா கோவில்களிலும் உண்டு. சில சமயம் நமது கிராமத்திலேயே ஒவ்வொரு குடும்பத்திற்கும் சிறு மாறுதல் பழக்கம் உண்டு. மேலும் இந்த மாவிளக்கு தீபப்பிரார்த்தனை, இந்த கிராமத்தில் மற்றைய சமூகத்தினரிடையே, ஸ்ரீ குளுந்தாளம்மன், ஸ்ரீ மாரியம்மன் கோவில் திருவிழாக்காலங்களில் செய்யும் பழக்கம் உள்ளது.

இந்த பிரார்த்தனை ஆரம்பம் முதல் முடியும்வரை சுமார் ஒரு மணி நேரம் பிடிக்கிறது. அரிசி உலரும்பொது பூஜை இடத்தை தயார்செய்து வேண்டிய சாமான்களை எடுத்துவைத்துக்கொள்ளலாம். இத்தகைய சிறுசிறு பிரார்த்தனைகளை செய்தால் நாம் வெளியூர் அல்லது வெளிநாட்டில் இருந்தாலும், நமது குடும்பங்களோடு தப்பளாம்புலியூரில் இருப்பதுபோன்று ஒரு மகிழ்வு உண்டாகிறது. ஒன்று மட்டும் நாம் மனதில் கொள்ளவேண்டும். பூஜைக்கு

சாமான்களை படைப்பதைவிட சிரத்தையோடு செய்வதுதான் முக்கியம்.

தங்கள் இருக்கும் இடத்தில் ஏதேனும் ஒரு சாமான் கிடைக்க வில்லையென்றால் பரவாயில்லை. உதாரணமாக அமெரிக்காவில் நான் வசிக்கும் இடத்தில் தேங்காய் கிடைப்பதில்லை. அப்படி கிடைத்தாலும் அது எப்போதும் நல்லதாக இருக்கும் என்று சொல்ல முடியாது. அதனால் நான் அதைப்பற்றி வருத்தப்படுவதைவிட நான் அதனை தவிர்த்து விடுவேன். அம்பாளுக்கு எதையும் பக்தியோடு கொடுத்தால் அதனை முழு பரந்த மனதோடு ஏற்றுக்கொள்வாள்.

விளக்கத்துடன் போட்டோக்களும் இணைக்கப்பட்டுள்ளன.

மேலும் கிராம கலாச்சாரப்படி, எங்களது குடும்ப மூத்த சந்ததியனிரின் அறிவுரைபேரில், இந்த பிரார்த்தனையில் நாங்கள் கடைப்பிடிக்கும் பழக்கத்தை முடிந்தளவுக்கு தொகுத்தளித்திருக்கிறேன். இதனில் ஏதேனும் மாற்றமோ அல்லது விட்டுப்போனாலோ தங்கள் தங்கள் குடும்ப பெரியோர்களை கலந்தாலோசித்து அவர்கள் அறிவுரையின் பேரில் பிரார்த்தனை செய்யலாம்

இதோ ஸ்ரீ அம்பாள் உங்களுடன்.

இப்படிக்கு

ஆங்கிலத்தில் தொகுத்தளிப்பவர்:

ஸ்ரீமதி மீனாக்ஷி வெங்கட்ராமணி (USA)

(தமிழாக்கம் : T.P.வெங்கட்ராமன்)

# தொடக்கம்

மாவிளக்கு தீபம் பொதுவாக கல்யாணமான பெண்களால் அம்பாளுக்கு செய்யப்படும் ஒரு பிரார்த்தனையாகும். சாதாரணமாக, தப்பளாம்புலியூர் வாசிகளான பெண்கள், மருமகள்கள் மற்றும் ஸ்ரீ நித்யகல்யாணியம்மன் பக்தர்களான வெளியூர்வாசிகள் எல்லோரும் நமது ஊர் கோவிலுக்கு வந்து இந்த பிரார்த்தனையை செய்வார்கள். அப்படி செய்யும் போது சில குடும்பங்களில் இதனை கோவிலின் ஸ்ரீ நித்யகல்யாணியம்மன் அம்மன் மற்றும் துர்க்கையம்மன் சன்னதியிலும் செய்வார்கள். அப்போது இதற்கு வேண்டிய சாமான்களை இரண்டு மடங்காக கொண்டு வந்து பிரார்த்தனை செய்து வழக்கம்.

இந்த ஆராதனை குடும்ப சுபிஷம் மற்றும் வேண்டுதல் (உடல்நல குறைவுகளை தீர்த்தல் போன்றவை) முதலிய காரணங்களுக்காக செய்வது வழக்கம். நமது முன்னோர்கள் ஆரம்பித்து வைத்த இந்த பழக்கத்தை தாமும் கடைப்பிடித்து நல்ல பயன் பெற்றவர்கள் ஏராளம்.

காலப்போக்கில், பயணம் மற்றும் சொந்த சௌகரியங்களுக்காக சில பக்தர்கள் இந்த பிரார்த்தனையை தங்களது வீடுகளிலேயே செய்து மகிழ்கிறார்கள்.

## மாவிளக்கு போடுவதற்கான மாதங்கள்/நாட்கள்:

இந்த பிரார்த்தனையை வருடத்தில் இரண்டு தடவை செய்வது வழக்கம், வருடத்தில் எல்லா விசேஷ சமயங்களிலும் செய்யலாம். ஆனால் நவராத்ரி நாட்கள், ஆடி மற்றும் தை மாதங்களில் செய்வது விசேஷமாகும். நீங்கள் முதன்முதலாக ஆரம்பித்தால் ஆடி மற்றும் தை மாதத்தில் ஆரம்பிப்பது நல்லது. வெள்ளிக்கிழமை மிகவும் விசேஷமான நாளாகும். ஆனால் இந்த பிரார்த்தனையை மிகவும் மடியாகவும் காலை வேளையில் செய்வதும் மிகவும் முக்கியம்.

புரட்டாசி (மஹாளய பக்ஷம் சமயம்) மற்றும் மார்கழி மாதங்களை தவிர்க்கவும். மேலும் அமாவாசை, பிரதமை, செவ்வாய், வியாழன், சனி கிழமைகள், பரணி, கார்த்திகை நக்ஷத்ரங்கள் முதலியவைகளை தவிர்க்கவும். யோகம் சரியில்லையென்றால் மற்ற நாட்களில் ஆராதனை செய்யவும்.

## காலையில் செய்ய வேண்டிய முக்கிய விஷயங்கள்:

1. புடவைகளை தோய்த்து மடியாக உலர்த்தவும். இல்லையேல் புது புடவையை உடுத்திக் கொள்ளலாம்.

2.இந்த ஆராதனை ஒன்றும் சாப்பிடாமல் வெறும் வயிற்றில் செய்ய வேண்டும். சில பேர் காபியோ, டீயோ மட்டும் சாப்பிட்டுக் கொள்வார்கள்.

3. 9 கஜம் புடவை கட்டிகொள்வது விசேஷம், இல்லையெனில் அதனால் ஆராதனை செய்வதை நிறுத்த வேண்டாம். சௌகரியம்போல் மடி அல்லது புது புடவையை உடுத்திக் கொள்ளலாம்.

## இந்த ஆராதனைக்கு வேண்டிய பொருள்கள்:

✔ சந்தனம், குங்குமம் மற்றும் புஷ்பம் அல்லது புஷ்ப மாலை போட்டு அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன் படம் (ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன் படம் இல்லாதவர்கள் SNASSஐ அணுகலாம்) (அல்லது வேறு எந்த அம்பாளின் படம் அல்லது விக்கிரஹம்), கோவிலில் அம்பாள் சன்னதியில் பிரார்த்தனை செய்வர்களுக்கு இது தேவையில்லை.

✔ கோல மாவு

✔ நுனி வாழையிலை அல்லது பித்தளை தாம்பாளம்

✔ மாவிளக்கு செய்ய அரிசி, உதிர்ந்த வெல்லம் அல்லது வெல்லசக்கரை தேன் ஏலக்காய் பவுடர் முதலியவைகள் (செய்யும் முறை பின்னர் சொல்லப்பட்டுள்ளது)

- ✔ சந்தனம் மற்றும் குங்குமம்
- ✔ இரண்டாக உடைத்த தேங்காய்
- ✔ எலுமிச்சை பழம்-2
- ✔ வாழைப்பழம்-4
- ✔ தொடுத்த புஷ்பம்
- ✔ உதிரி புஷ்பம்
- ✔ வெற்றிலை பாக்கு
- ✔ ஊதுபத்தி
- ✔ ஏற்றிய தீபம்
- ✔ கற்பூரம்
- ✔ பஞ்சுத்திரி
- ✔ நெய்
- ✔ பஞ்சபாத்ர உத்தரணி

## மாவிளக்கு செய்யும் முறை:
## வேண்டிய சாமான்கள்:

- அரிசி - ஒரு கப்
- உதிர்ந்த வெல்லம் அல்லது வெல்லசக்கரை-3/4 கப்
- தேன் (வேண்டுமானால்)-2 ஸ்பூன்
- ஏலக்காய் பவுடர்- தேவையான அளவு

அரிசியை களைந்து சுமார் அரை மணி நேரம் ஊறவைக்கவும், எல்லாம் தண்ணீரையும் வடிகட்டி, ஒரு மடியான துணியில் பரத்தி உலரவைடக்கவேண்டும். அரிசியில் ஈரப்பசை இருக்குமளவுக்கு (கையால் தொட்டால் தண்ணீர ஒட்டக்கூடாது) உலரவைக்கவேண்டும். பிறகு அதனை மிக்ஸியில் போட்டு நைசாக அரைக்கவும். அரைத்த

அரிசிமாவை நன்றாக சலித்து மீதமுள்ள அரிசியில் மறுபடியும் மறுபடியும் அரைத்து நைசாக அரிசிமாவை தயாரிக்கலாம். பிறகு அதில் உதிர்ந்த வெல்லத்தை போட்டு நன்றாக ஒரு தரம் மிக்ஸியில் அரைக்கவும் (மிக்ஸிக்கு பதிலாக கல் உரல் மற்றும் இரும்பு உலக்கை உபயோகிப்பது பழையகால ஆசார முறையாகும்).

பிறகு அதை எடுத்து (வேண்டுமானால்) சிறிது தேன், ஏலக்காய் பவுடர் முதலியவைகளை சேர்த்து நன்றாக பிசைந்து இரண்டு உருண்டைகளாக செய்யவும். உருண்டைகள் சரியாக வரவில்லையென்றால் வேண்டுமென்றால் சிறிதளவு தண்ணீரை தெளித்துக்கொள்ளாம். தப்பளாம்புலியூர் வழக்கப்படி இரண்டு விளக்குகள் போடவேண்டும்.

அதன் பிறகு, அந்த மாவு உருண்டையின் மேல், கட்டை விரலால் (நெய்விடும் அளவுக்கு) குழி செய்து, ஆசாரமான பஞ்சுத்திரியை நெய்யில் நனைத்து வைக்கவும்.

## ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன் சன்னதியில் மாவிளக்கு பிரார்த்தனை செய்யும் முறை:

அம்பாள் முன்னிலையில் கோலம் போட்டு அதன் மேல் நுனி இலையை வைக்கவும். நுனி இலையின் வெட்டிய பக்கம் அம்பாளின் வலதுகை புறமாக இருக்கும்படி இலையை வைக்கவேண்டும். அந்த இலையின் நடுவில் (நரம்பின் மேல்) இரண்டு மாவிளக்கையும் வைத்து குழியில் நெய் விடவேண்டும். பிறகு ஒரு தேங்காய் மூடி, ஒரு வாழைப்பழம் மற்றும் ஒரு எலுமிச்சம்பழம் இவைகளை, அந்த விளக்குகளின் இரண்டு பக்கங்களிலும் வைக்கவும்.

பிறகு வெற்றிலைப்பாக்கை ஒரு பக்கத்தில் வைத்து, தொடுத்த புஷ்பத்தால், மாவிளக்குகளுக்கு மாலையாக அலங்கரிக்கவும். மேலும்





அவைகளுக்கு சந்தனம், குங்குமம் வைத்து திரியை ஏற்றவும். மாவிளக்கை ஏற்றியவுடன், அந்த விளக்குகளுக்கும் மற்றும் அம்பாளுக்கும் ஊதுபத்தி காட்டி, எரிந்து கொண்டிருக்கும் தீபத்தின் மூலமாக தீபாராதனை காட்டவும்.

அதன் பிறகு உங்களுக்கு தெரிந்த 11 அல்லது 16 அம்பாளின் நாமங்களை சொல்லியோ அல்லது அஷ்டோத்ரத்தை சொல்லியோ உதிரி புஷ்பத்தின் மூலம் அர்ச்சனை செய்ய வேண்டும். உங்கள் பார்வைக்காக, சில நாமாக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் ஒவ்வொருவரும் அவர்களுக்கு தெரிந்த நாமாக்களை சொல்லி அர்ச்சனை செய்யலாம்.

ஓம் காமாஷியை நமஹ
ஓம் கல்மஷைஞ நமஹ
ஓம் வித்யாப்ரதாயின்யை நமஹ
ஓம் கருணாம்ருதசாகராயை நமஹ
ஓம் வரதாயை நமஹ
ஓம் கந்தர்பஜனன்யை நமஹ
ஓம் மஹாஞானதாயின்யை நமஹ
ஓம் லோகமாத்ரே நமஹ
ஓம் மதுரவேணி சஹோதர்யை நமஹ
ஓம் ஏகாம்ரநாதாயை நமஹ
ஓம் காமேஸ்வரியை நமஹ

அர்ச்சனைக்குப்பிறகு தண்ணீரால் 3 தடவை வாழையிலையை ப்ரதக்ஷிணமாக சுற்றிவிட்டு அம்பாளுக்கு மாவிளக்கு நெய்வேத்தியம் செய்ய வேண்டும். பிறகு அம்பாள் மற்றும் மாவிளக்குகளுக்கும் சேர்த்து, கற்பூரம் காட்டி நமஸ்காரம் செய்து தங்களுக்கு வேண்டியதை வேண்டிக்கொள்ளலாம். மாவிளக்கு சற்றுநேரம் எரியும். மாவிளக்கு எரிந்து கொண்டிருக்கும்போது பக்தி பாடல்களையோ அல்லது ஸ்லோகங்களையோ சொல்லி பிரார்த்தனை செய்து கொள்ளலாம். மாவிளக்கு முழுவதும் எரிந்து முடிவதற்கு சிறிது முன்பாகவே, திரியை ஒரு உத்தரணி மூலம் எடுத்து புஷ்பத்தால் மலையேற்ற வேண்டும்.



பிறகு இரண்டு மாவிளக்குகளையும் எடுத்து அதில், தாங்கள் நெய்வேத்தியம் செய்த தேங்காய் மூடியிலிருந்து திருவிய தேங்காயை போட்டு நன்றாக பிசையவும். அந்த மாவை சில சுமங்கலிகளுக்கு மஞ்சள் குங்குமத்தோடு கொடுக்கவும். பிறகு மாவிளக்குமாவை பிரசாதமாக குடும்பத்துடன் பகிர்ந்து கொள்ளலாம்.



நீங்கள் தப்பளாம்புலியூர் கோவிலுக்கு சென்று மாவிளக்கு பிரார்த்தனை செய்ய முடியாவிட்டால் அம்பாளுக்கு உங்கள் விட்டிலேயே நீங்கள் மேற்சொன்னபடி செய்து அம்பாளின் அருள் பெற்று கொள்ளலாம். நித்யகல்யாணி அம்மன் எப்பொழுதும் உங்கள் விட்டிலேயே இருக்கிறாள்.

நம் முன்னோர்களுடைய ஆன்மீக பழக்க வழக்கங்களை பின்பற்றி அம்பாளின் கருணையையும், அருளையும் பெற்று நாமும், நமது குடும்பங்களும் ஆரோக்யம் மற்றும் சுபிக்ஷங்களை பெற்று வாழ்வோமாக!!!